**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக் கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம்- மட்டம் 6**
**தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II- 2021/2022**
**LLU6716- வர்த்தக் சட்டம்**
**காலம்: ஒரு (01) மணித்தியாலம்**
**திகதி: 16.09.2022** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 02.30**

**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

**ஒரு (01) வினாவிற்கு மட்டும் விடையளிக்குக.**

1. மாலனி எனும் பண்டாரவளையைச் சேர்ந்த ரோஜா மலர்களின் விநியோகஸ்தர் ஒருவர் 10 ஆம் திகதி செப்டெம்பர் 2022 அன்று கொழும்பில் இடம்பெறவுள்ள மூபீகா என்பவரின் திருமணத்திற்கு 200 ரோஜா மலர்களை அனுப்புவதற்கு உடன்பட்டார். தேவையான அலங்காரங்களிற்காக தமது திருமண வைபவத்தை திட்டமிடுபவருக்கு கொடுக்க வேண்டும் என்பதால் மூபீகா 9 ஆம் திகதி செப்டெம்பர் 2022 அன்று தனக்கு 200 ரோஜா மலர்களும் தேவைப்படுவதாக மாலனிக்கு தெரிவித்தாள். 8ஆம் திகதி அன்று மாலனி மலர்களை எக்ஸ்பிரஸ் விரைவு அஞ்சல் சேவையிடம் “9 ஆம் திகதி செப்டெம்பர் 2022 அன்று பி.ப. 5 இற்கு முன்னர் தரப்பட்ட விலாசத்திற்கு விநியோகிக்குமாறு” அறிவுறுத்தி அளித்தாள்.

   எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எக்ஸ்பிரஸ் விரைவு அஞ்சல் சேவையினருக்கு, 9 ஆம் திகதி செப்டெம்பர் 2022 அன்று மலர்களை விநியோகிக்க முடியாததுடன் , அவற்றை 10 ஆம் திகதி செப்டெம்பர் 2022 அன்று காலை 8 மணியளவில் விநியோகித்தது. பொதி திறக்கப்பட்ட போது, 150 சிவப்பு ரோஜாக்கள் மட்டுமே அனுப்பப்பட்டும், அவற்றுள் பாதி மலர்கள் சேதமடைந்து இருந்தமையும் கண்டறியப்பட்டது.

   மேற்தரப்பட்ட நிகழ்வுகளில் இருந்து எழும் சட்ட விளைவுகளை இலங்கையின் 11ம் இலக்க 1896 ஆம் ஆண்டின் பொருட்கள் விற்பனைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளின் கீழ் ஆராய்க. மூபிகாவிற்கு கிடைக்கக்கூடிய ஏதேனும் நிவாரணம் காணப்படுகிறதா என விளக்குவதுடன், உமது விடையை தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

   **(20 புள்ளிகள்)**

2. மோட்டார் வண்டி கடைக்கு உரிமையாளரான டேவிட் என்பவரது வியாபாரம் பணத்தின் மீது விற்பனையை மட்டுப்படுத்தியிருக்கின்றது. இவர் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழான மோட்டார் வாகன விற்பனையை உள்ளடக்குவதன் மூலம் தனது வியாபாரத்தை விரிவாக்க இயலுமா எனக் கருதுகிறார். இவர் பின்வருவன மீது உமது அறிவுரையை நாடுகிறார்.

   i. வாடகைக் கொள்வனவு ஒப்பந்தம் மற்றும் பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் என்பவற்றிற்கு இடையிலான வேறுபாடு (08 புள்ளிகள்)
   மற்றும் ;

   ii. வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் உரிமையாளரின் உரிமைகளும் கடமைகளும் (12 புள்ளிகள்)

   இலங்கையின் 29 ஆம் இலக்க 1980 ஆம் ஆண்டின் நுகர்வோர் கடன் வழங்குச் சட்டத்தின் உறுப்புரைகளின் கீழ் டேவிட்டிற்கு அறிவுறுத்துக.
   உமது விடையை தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

*-பதிப்புரிமை பெற்றது-*